**சீ.எவ்.சீ. பவுன்டின் (பிணையால்) வரையறுக்கப்பட்ட கம்பனி - 2017/ 2018**

---

சீ.எவ்.சீ. பவுன்டின் (பிணையால்) வரையறுக்கப்பட்ட கம்பனியின் (''கம்பனி'') 2018 மார்ச் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய 2018 மார்ச் 31 ஆந் திகதியில் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற மீளாய்வாண்டின் கம்பனியின் செயற்பாடு தொடர்பான எனது அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான பணிப்பாளர் சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கம்பனியின் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லையும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது,

- எனது அறிக்கையின் 2.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து கணக்காய்விற்கு தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் விளக்கமளித்தல்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், எனது பரிசோதனையின் பிரகாரம் கம்பனியினால் முறையான நிதி அறிக்கைகள் பேணப்பட்டுள்ளமை தென்படுகின்றதெனவும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனி நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

### 2.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

2018 பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களுக்குரிய ரூபா 681,426 தொகையான தொழில்சார் படிகள் கணக்கு வைக்கப்பட்டிராததுடன், முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 504,762 தொகையான தொழில்சார் படிகள் மீளாய்வாண்டின் செலினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 21,487,208 ஆகும். மேலும், மீளாய்வாண்டிற்கான கம்பனியின்

செயற்பாட்டு செலவினம் செயற்பாட்டு வருமானத்திற்கு சமனாக காணப்பட்டதுடன், ரூபா 21,487,208 தொகையான மொத்த செயற்பாட்டு வருமானமும் திறைசேரி மானியங்களை கொண்டிருந்தது.

## 4. செயற்பாட்டு விளைவுகள்

------------------------------------

### 4.1 செயலாற்றல்

-------------------

நிதி நகர செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக தேவையான சட்டரீதியான ஆவணத்தினை வரைபாக்குவதற்கு இந்த கம்பனி தாபிக்கப்பட்டிருந்ததுடன், வரைபாக்கப்பட்ட கொழும்பு நிதி நகர அதிகாரச்சட்டம் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு 2019 ஏப்ரல் மாதம் முன்வைக்கப்பட்டது.

## 5. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

---------------------------------------------------------

### 5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

----------------------------------------------

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தினால் வரைபு ஆண்டறிக்கைகள் நிதியாண்டு நிறைவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், கம்பனி 2018 மார்ச் 31 ஆந் திகதியில் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை 2019 ஆகஸ்ட் 23 ஆந் திகதியே சமர்ப்பித்திருந்தது.